Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 06 (19-01-1994) புதன்கிழமை ஓசை 335

## தரமற்ற பாண் உற்பத்தி செய்த பேக்கரி மீது கடும் நடவடிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர், பொது சுகாதாரப்பகுதியினர், காவல்துறையினர் ஆகியோர் கூட்டாக நேற்று நடாத்திய திடீர் சோதனையொன்றின் போது யாழ்நகர் பேக்கரியொன்றில் பாண் தயாரிப்பதற்காக கோதுமை மாவினை அறையின் வெறும் தரையில் குழைத்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இத்தகைய செயன்முறைகள் எம்மக்களின் சுகவாழ்விற்கு தீங்கு விளைவிக்கும் என்பதினால் குழைக்கப்பட்ட மாவினை பாவனைக்கு விடாது அழிக்கப்பட்டதுடன் பேக்கரி உரிமையாளர் மீதும் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொற்று நோய்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரி முகாம் விசாரணைக் குழு அறிக்கை

# 15 நிமிடத்தில் புலிகளின் தாக்குதலால் இராணுவக் கட்டமைப்பு தகர்ந்தது

## பாதுகாப்பு ஏற்பாடு சீரில்லையாம்

(கொழும்பு)

**பூநகரி கூட்டுத்தளம் மீது நவம்பர் 11 ஆம் திகதி காலை 1.30 மணியளவில் புலிகள் தாக்குதல் தொடங்கி பதினைந்துநிமிடங்களில் அங்குஇராணுவக்கட்டமைப்பு முழுவதும் தகர்ந்து விட்டது. முகாமில் படைப்பிரிவு, படை அணி, சிறுபடைப் பிரிவு என்றும் எதுவுமே இல்லை. சிப்பாய்களும், அதிகாரிகளும் குழம்பிய நிலையில் அங்குமிங்குமாக ஓடித்திரிந்தனர் என்று இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சரியான முறையில் கட்டளை பிறப்பிக்கும் அமைப்பை நிறுவத் தவறியதாக மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்தை, பிரிகேடியர் நமுனி, பிரிகேடியர் எல். பியலாகெல மற்றும் மூன்று மூத்த இராணுவ அதிகாரிகள் மீது இராணுவ விசாரணை மன்று குற்றம்சாட்டியுள்ளது.

பூநகரியில் கவசவாகனங்களான டாங்கிகள் நிறுத்தப்பட்டிருந்த இடங்களுக்கு போதிய வசதிகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே முகாம் பகுதிகளினுள் புலிகள் ஊடுருவி விட்டதாக குறிப்பிடும் இவ்வறிக்கை டாங்கிகளை இயக்குபவர்கள் மோதல் ஆரம்பித்ததும் டாங்கிகள் நின்ற இடங்களுக்கு விரைந்தபோது அங்கு ஏற்கனவே புலிகள் நின்றதாகவும் குறிப்பிடுகிறது. எவ்வித எதிர்ப்புமின்றி டாங்கிகள் எதிரியிடம் இழக்கப்பட்டது. டாங்கி குழுவினர் தமது சொந்த ஆயுதங்களையே இழந்ததுடன் இக்குழுவின் அதிகாரி தனது தொடர்பு கருவியையும் இழக்கவேண்டி ஏற்பட்டதாக அவ்வறிக்கை குறிப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையை இராணுவமே முடிவுக்குக் கொண்டுவர முடியும்

## உலங்குவானூர்தி நோட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரப்பகுதியை உலங்குவானூர்தி ஒன்று நேற்று முன் தினம் மாலை 6.20 மணியளவில் வட்டமிட்டுநோட்டமிட்டது. பலாலியிலிருந்துவந்த உலங்குவானூர்தி பருத்தித்துறையை வட்டமிட்டுவிட்டு பலாலி நோக்கிச் சென்றது. (யோ)

## ஷெல் வீச்சினால் சிறுவன் காயம்

(குருநகர்)

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் மண்டைதீவு சிறிலங்கா ராணுவ முகாம் பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஐந்து எறிகணைகள் குருநகர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்களுக்கு அனுமதி வழங்கும் நடைமுறையில் மாற்றம்

(கொழும்பு)

வடமாகாணத்திற்கு அத்தியாவசிய பொருள்களை எடுத்துச் செல்வதற்கு இராணுவ அனுமதி வழங்கும்பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு இந்த அனுமதி வழங்கும் நடவடிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையில் தற்போது பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவினால் தயாரிக்கப்படும் விண்ணப்பப்பத்திரங்களைமட்டுமே தனியார் வர்த்தகர் பொருள்களை அனுப்பும்போது பாவிக்க வேண்டும் என வற்புறுத்தப்படவுள்ளதாகவும் அதில் பல ஆவணங்கள், விபரங்கள் என்பன கோரப்பட்டுள்ளன என அகதிகளுக்கான

வும் தெரியவருகின்றது

இதேவேளை இதுவரை பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவில் பொருள்களுக்கு அனுமதி வழங்கும் இராணுவ அதிகாரி கப்டன் சாள்ஸ் அங்கிருந்து இடமாற்றம்செய்யப்பட்டு அவரின் இடத்திற்கு புதிதாக ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிய வருகிறது. இவரது இடத்திற்கு றோகான் திலக்க நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.(நி, க)

## கொழும்பு ஆயர் 25-ல் யாழ்ப்பாணம் வருகிறார்

கொழும்பு மறைமாவட்ட ஆயர் அதிவண. நிக்லஸ் மார்க்கஸ் பெர்னான்டோ எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார் என அரசசார்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

மேலும் எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னான்டோ யாழ்ப்பாணம் செல்வதற்காக அரசாங்கம் சிறிலங்கா விமானப்படை விமானம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளதாக அரசசார்பு பத்திரிகையான சண்டே ஒப்சேபர் செய்தி வெளியிட்டுள்ளது.

கென்னத் பெர்னான்டோ நான்காம் திகதியே யாழ்ப்பாணம் புறப்படஇருந்ததாகவும் எனினும் அன்று சிறிலங்கா சுதந்திர தினம் என்ற காரணத்தினால் விமானப்

# முடிவுக்குக் கொண்டுவர முடியும்

## இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத்தீர்த்து சமாதானத்தைக் கொண்டு வர இராணுவத்தினாலேயே முடியும் என இராணுவத் தளபதி ஜெரி. டி சில்வா தெரிவித்தார். வருடத்திற்கு 2200 கோடிக்கு மேல் செலவை ஏற்படுத்தும் யுத்தத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வர இராணுவச் சீருடையினராலேயே முடியும் என மேலும் அவர் தெரிவித்தார்.

தப்பி ஓடிய 12,000 படையினருக்குப் பதிலாக புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதனமூலம் இராணுவத்தின் பலம் அதிகரிக்கப்படும். நல்ல பயிற்சி வழங்கப்பட்டால் எதிரிக்கு நல்ல பதிலடியை வழங்க முடியும். ஒரு குறிப்பிட்டஆண்டை அல்லது காலத்தைவைத்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது.

ஜனகபுர தாக்குதலில் புலிகள் ஒரு சில மணிநேரத்தில் முகாமை தாக்கிமுடித்து விட்டனர். ஆனால் பூநகரி தாக்குதலின் போது அவர்கள் பல வீனமடைந்தபடியால் முகா

(4ஆம் பக்கம் பார்க்க)

அகதிகளுக்கான

# ஐ. நா. அதிகாரியின்வருகை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள உயர்ஸ்தானிகராலய அதிகாரியின் யாழ். விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி ஸ்தாபனத்தின் கொழும்பு அலுவலகத்தின் பாதுகாப்பு அதிகாரியான டாக்டர் பீற்றர் நிக்கலஸ் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதற்கு திட்டமிட்டிருந்தார். எனினும் இவரது யாழ். விஜயம் காங்கேசன் துறைக்கும் பருத்தித் துறைக்கும் இடையிலான

(4ஆம் பக்கம் பார்க்க)

பெர்னான்டோ யாழ்ப்பாணம் செல்வதற்காக அரசாங்கப்பலில் ஏற்றப்பட்ட

லங்கா சுதந்திர தினம் என்ற காரணத்தினால் விமானப் படை விமானம் ஏதும் ஒழுங்கு செய்யப்பட முடியவில்லை இதனையடுத்தே அவர் 5-ம் திகதி யாழ்ப்பாணம் புறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவருடன் இவரின் மனைவியும் வேறு இருவரும் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

ஆயர் நான்கு இலவசப் பயணச்சீட்டுக்களைக் கோரியிருந்தார். இது அரசினால் அங்கீகரிக்கப்பட்டதுடன்பாதுகாப்புக் கவுன்சிலினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# தடைசெய்யப்பட்ட வலயத்துக்குள் துப்பாக்கிசூடு நடத்த அனுமதி

## ஜனாதிபதி விஜேதுங்க பிரகடனம்

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட வலயத்துக்குள் பயணம் செய்யும் படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்த அதிகாரிகளுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஐந்தாவது பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட வலயத்தை ஏற்படுத்துவதற்கான பல்வேறு ஒழுங்கு விதிகளை ஜனாதிபதி விஜேதுங்க பிரகடனம் செய்துள்ளார். இதன்படி தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வதிகாரியின் எழுத்து மூல அங்கீகாரமின்றி எவரும் தடைசெய்யப்பட்ட வலயங்களினுள் படகு அல்லது வள்ளம் மூலமாக அல்லது வேறு எவ்வழியிலோ எக்காரணம் கொண்டும் செல்ல முடியாது. இந்த விதியை மீறுவோர் குற்றம் புரிந்தவராக கருதப்படுவார். இதன் பிரகாரம் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர், ஆயுதப் படைகளின் உத்தியோகஸ்தர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபர் தடைசெய்யப்பட்ட வலயத்திற்குள் செல்லும் படகுகளை அல்லது வள்ளத்தை அல்லது எந்த ஒரு நபரையும் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தைகொண்டிருப்பார்.

அனுமதியின்றி தடைசெய்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று மேஜர் ஜெனரல்கள் இரு பிரிகேடியர் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் உயர் கட்டமைப்பின் மாற்றங்கள் நடைபெறுகின்றன. மூன்று மேஜர் ஜெனரல்களுக்கும் இரு பிரிகேடியர்களுக்கும் உயர் கட்டமைப்பில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிழக்குப் பகுதி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த மூன்றாவது படைப்பிரிவுக்குத் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஏ. எம். யு செனிவரட்னா மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். மேஜர் ஜெனரல் லக்கி அல்கம

(4ஆம பக்கம் பார்க்க)

# கல்வி உபகரணங்களை கடற்படை இறக்கியது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு அமைச்சினால் யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோடெக்குகள், புகைப்படக் கருவிகள், திசையறி கருவிகள் போன்ற பொருட்கள் றுகுணு கப்பலில் ஏற்றப்பட்ட பின்னர் கடற்படையினரால் இறக்கப் பட்டுள்ளன இப்பொருட்கள் கூட்டுப்படைத்தலைமையகத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே கப்பலில் ஏற்றப்பட்டன என்பதும், யாழ். மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளுக்காக இவை அனுப்பப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சிறிலங்கா இராணுவத்திற்கு மீண்டும் ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. முப்பது படை நிலையங்களில் இந்த ஆட்சேர்ப்பு கடந்த வியாழன் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கை பெப்ரவரிமாதம் இரண்டாம் திகதிவரை நீடிக்கும் என இராணுவதலைமையகம் அறிவித்துள்ளது. மாத்தறை, காலி, புத்தளம், திருமலை, மதவாச்சி, மின்னேரி, இரட்டைப் பெரியகுளம், அம்பாந்தோட்டை, கொழும்பு, அம்பாறை, இரத்தினபுரி, அநுராதபுரம், கண்டி போன்ற இடங்களில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

கடந்த வருட இறுதியில் நடைபெற்ற இராணுவ ஆட்சேர்ப்பைத் தொடர்ந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மட்டும் இந்தியப் படை; சிறிலங்காவின் திட்டம் இதுவே!

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை பிடிப்பதை மையமாகக் கொண்டு இவ்வருட நடுப்பகுதிக்குள் வடக்கில் மட்டும் இந்தியப் படையைப் பயன்படுத்துவது என சிறிலங்கா அரசு திட்டமிட்டிருந்ததாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கென இந்திய அதிகாரிகளுடன் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் உத்தியோகபூர்வமான பேச்சுக்களை நடத்துவது எனவும் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையிலும் இது குறித்து விரிவான பேச்சுக்கள் நடாத்துவது எனவும் சிறிலங்கா அரசு திட்டமிட்டிருந்தது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலுக்குமுன்பாக இந்நடவடிக்கையை மேற்கொள்வதென சிறிலங்கா அரசு திட்டமிட்டிருந்தது என லங்காதீப மேலும் தெரிவிக்கிறது.

# குடும்பத்துடன் தனிமையாக வெளிநாட்டில் வாழவே விரும்புகிறேன்

## ஓய்வு பெறும் விமானப்படைத் தளபதி கூறுகிறார்

தனது பதவிக்காலத்தின் போது போதுமானளவு இரத்தம் சிந்தும் அனுபவங்களை அனுபவித்துள்ளதாக விமானப்படை தளபதி எயர் மார்ஷல் ரொரன்ஸ்குணவர்தனா தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவது தொடர்பாக கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு கூறினார்.

வாழ்நாளில் பெரும் பகுதியை தாம் விமானப்படையிலேயே கழித்துள்ளதாகவும் தொடர்ந்தும் தாம் பதவியில் நீடிப்பது பதவிப் போட்டிகளால் படையினரிடையே கட்டுப்பாட்டை குலைக்கும் எனவும் அவர் கூறினார்,

எமது குடும்பத்துடன் நான் வெளிநாடு ஒன்றில் தனிமையாக வாழ்வதையே விரும்புறேன் பாதுகாப்பு படையில் எந்த ஒரு பதவியையும், தொடர்ந்து வகிக்க விரும்பவில்லை மலேசியாவிற்கான சிறிலங்கா தூதுவராக பணியாற்றவே விரும்புகிறேன். இதை அரசே முடிவு செய்ய வேண்டும் எனவும் அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

14-01-94 அன்று கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடியில் தேசிய அ. அட்டை, இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன அ. அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7261)

### விற்பனையாகிறது

THE ASTROLOGICAL MAGAZINE 1994 ANNUAL NUMBER விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-8406)

### தகவல் தரவும்

N. V. 2000 EN. இலக்கமுடைய NATIONAL PANASONIC ரக DECK ஒன்று எல். புஸ்பராஜசிங்கம், பூம்பந்தல், மானிப்பாய்வடக்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் உள்ள வீட்டிலிருந்து களவாடப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் சங்கானை காவல் துறையுடன் தொடர்புகொள்ளவும்- சன்மானம் வழங்கப்படும்- (சி-8411)

### சமய அறிவுப் போட்டி நடத்துவதற்கு ஏற்பாடு

வண்ணை சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோவிலின் சைவ சமய அபிவிருத்திக் கழகம் சைவ சமய அறிவுப் பரீட்சையையும், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் என்பவற்றில் செயல்முறைப் போட்டியையும் நடத்த முன்வந்துள்ளது. சைவ சமய அறிவுப்போட்டி எதிர்வரும் பெப்ரவரி 13ஆம் திகதியும், ஏனைய போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் சைவசமய-அபிவிருத்திக் கழகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

### சனசக்தி கொடுப்பனவு

(கொழும்பு)

வறுமை ஒழிக்கும் முகமாக வழங்கப்பட்டு வரும் 'சனசக்தி' திட்டத்தின் ஐந்தாவது சுற்றுக் கொடுப்பனவு எதிர்வரும் மார்ச் முதல் வழங்கப்


நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

நல்லூர் இளங்கலைஞர் மன்றம்

19-1-1994 புதன்கிழமை

மாலை 5.00 மணி

**தலைமை:-** என். கே. குலசிங்கம் (தலைவர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

**பிரதம விருந்தினர்கள்:-**

திரு. திருக்குமரன் (அரசியல் பொறுப்பாளர் வலிகாமம்)

திரு. வேந்தன் (சதீஸ்) (பொறுப்பாளர் நல்லூர் வட்டவை)

திரு. இமையவன் (பொறுப்பாளர் தொழிற் சங்கம்)

நிகழ்ச்சிகள்

**தேசியக்கொடியேற்றல்:-** திரு. திருக்குமரன்

**மௌன அஞ்சலி**

**மங்கள விளக்கேற்றல்:-**

திரு. செ. கணேசராசா (கணேசன் களஞ்சியம் திருநெல்வேலி)

திரு. இ. காந்தரூபன் (ரூபன் களஞ்சியம் திருநெல்வேலி)

**தமிழ்த்தாய் வாழ்த்து:-** திரு. பொன். சுந்தரலிங்கம்

**மங்கள இசை:-** தவில் மேதை அமரர் N. R. சின்னராசாவின் புதல்வர்கள் ரவி, சுதா குழுவினர்.

**தலைமையுரை:**

**வரவேற்புரை:-** திரு. க. தியாகராசா (பொருளாளர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

பிரதம விருந்தினர்கள் உரை

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

**நன்றியுரை:** திரு. காசி விஸ்வநாதன் (உபதலைவர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

கெஞ்சிற் கச்சேரி

நாதஸ்வரக் கலாநிதி N.K பத்மநாதன் - நாதஸ்வரம்

இசைஞான திலகம் V R ராதாகிருஷ்ணன் - வயலின்

இசைக்கலா வித்தகர் K. கண்ணதாசன் - மிருதங்கம்

தவில் வித்துவான் P. முருகதாஸ் - தவில்

வித்துவான் சதா வேல்மாறன் - தபேலா

வித்துவான் P. ரதிரூபன் - கடம்

மெல்லிசை

S.G. சாந்தன் குழுவினர் பார்வதி சிவபாதத்துடன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

(8381)


# அமைச்சர் ரணசிங்க மீதான ஒழுங்குவிசாரணை ஜன.26-ல்

(கொழும்பு)

தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பான விசாரணை எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் பேசியது உட்பட பல குற்றச்சாட்டுகள் அவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூ, நெசவுக்கைத் தொழில் ராஜாங்க அமைச்சர் எம்.டி.ஏ. குணதிலக்க, சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் ஆகியோர் அடங்கிய குழுவே இவ் விசாரணையை மேற்கொள்கிறது.

# தென்மாகாண முதல்வரும் ஈழம் கேட்டாரா?

## மாகாணசபை கலைப்புப்பற்றி கேள்வி

(கொழும்பு)

அன்று வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு ஏற்பட்ட அதே கதிதான் இன்று தென் மாகாண சபைக்கும் ஏற்பட்டுள்ளது முன்னாள் தென் மாகாண முதல்வர் அமரசிறி தொடங்கொடவும் ஈழம் ஒன்றைப் பிரகடனப்படுத்துவார் என்று அரசாங்கம் நினைத்துவிட்டதோ? என்றுநான் வியப்புற்றேன். இவ்வாறு கலைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையின் திட்டமிடல் அமைச்சர் ஜோன் செனவிரத்தினா கூறியுள்ளார்.

அம்பலாங்கொடநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் அங்கு மேலும் கூறுகையில் வடக்கு-கிழக்கு பிரச்சினைகளை தீர்ப்பதற்கே மாகாண சபை அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. மாகாணசபை மூலம் அதிகாரப்பரவலாக்கம் நடைபெறும் எனக் கூறப்பட்டாலும் இதுவரை ஒழுங்கான முறையில் அதிகாரப் பரவலாக்கம் நடைபெறவில்லை எனவும் தெரிவித்தார்.

# பரந்தன் இரசாயன ஊழியருக்கு சம்பள உயர்வு கிடைக்கும்

பரந்தன் இரசாயனதொழிற்சாலை ஊழியர்களுக்கு இதுகாலவரை வழங்கப்படாமலிருந்த சம்பள உயர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் கூறியுள்ளார்.

யுத்த நிலைமையால் பரந்தன் தொழிற்சாலை இயங்காமல் இருக்கின்ற போதும் ஊழியர்களின் கஷ்டங்களை கருத்திற்கொண்டு மீள்கடன் தொகையும் வழங்கப்பட இருப்பதாகவும், 1988-ன் சம்பள மறுசீரமைப்பின்படி 30 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட இருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

அண்மையில் நிதியமைச்சில் தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் திறைசேரி அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இதற்கான இணக்கம்காணப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றன.

### விளையாட்டு கழகங்களை இணைக்கநடவடிக்கை

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தில் கழகங்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்பும் - மெய்வல்லுநர் துறை நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை 21ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கும்படி கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை - கப்டன் என்- சோமசுந்தரம் உபதலைவர் யா. மா. மெ. சங்கம் 45, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.


## 51-ம்நாள் நினைவஞ்சலி



மலர்வு: 1965-12-25

உதிர்வு: 1993-11-30

### மாணிக்கம் ஜெகதீஸ்வரன்

(ஊரெழு கிழக்கு)

எம் செல்வமே...
நீ எம்மை விட்டு
பிரிந்தாலும் எம் நெஞ்சை விட்டு
என்றும் நீ அகலமாட்டாய்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

"ஆனந்தகானம்"



## வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அச்சகமொன்றிற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இயந்திர இயக்குனர்
2. அச்சுக் கோர்ப்பாளர்
3. அச்சக முகாமையாளர்
4: கணக்குப் பதிவாளர்
5, ஒப்புநோக்குனர்

❋ மூன்று வருடங்களுக்குக் குறையாத வேலையனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுதியுடையவர்கள் விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் கீழ்காணும் முகவரிக்கு 1994ஆம் ஆண்டு ஜனவரிமாதம்23-ம் நாள்காலை 9.00 மணிக்கு நடைபெறவிருக்கும்நேர்முகத் தகுதிகாண் தேர்வுக்கு வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

❋ நேர்முகத் தகுதிகாண் தேர்வுக்கு வருகை தரவேண்டிய முகவரி...

வருவாய்ப் பகுதிச் செயலகம்,
நிதித்துறை,
பலாலி வீதி, கந்தர்மடம்.
யாழ்ப்பாணம். (சி-8410)


## நினைவு கூருகின்றோம்...

சுற்றுக் கொடுப்பனவு எதிர் வரும் மார்ச் முதல் வழங்கப் படவுள்ளது. என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சிரமதானம்

(தொல்புரம்)

வங்கக் கடலில் காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் ஞாபகார்த்தமாக தொல்புரம் பகுதியில் சிரமதானப் பணிகள் இடம் பெற்றன.

தொல்புரம் மேற்கு கிராமிய உற்பத்திக் குழுவினரும், கிராமசேவையாளரும், அவ்வூர் பொதுமக்களும் இணைந்து தொல்புரம் பெரியகுளத்தின் நீர்ப்பாசனவாய்க்காலை சிரமதானம்மூலம் புனரமைத்துள்ளனர். இப்பணியினால் சுமார் 300 விவசாயக் குடும்பங்கள் பயனடைய வாய்ப்பு எட்டியுள்ளது. கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற மேற்படி புனரமைப்புப் பணியினை தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் ஆரம்பித்து வைத்தார். (41)

## சாளரம் ஜனவரி இதழ் வெளிவந்துவிட்டது

ஜனவரி மாதத்திற்கான சாளரம் இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. இந்த இதழில் சமூகவியல் ஒரு அறிமுகம், தெறிப்பு, ஒலிம்பிக் போட்டிகள், யாழ்ப்பாணத்தில் அதிசய உலகம், பகலவன் பதில்கள், நீரிழிவை கட்டுப்படுத்தும் சிறு குறிஞ்சா, பனைப் பரம்பலும் பயன்பாடும், ஆங்கிலம் கற்போம், தமிழ்மொழிபேணலும்மாணவர் பங்களிப்பும், பல்கலைக்கழக அனுமதியும் தரப்படுத்தலும் எமதுஇன்றைய நெருக்கடிகளும், அறிவுலகம், சிங்கள ஆட்சியில் அரியாசனம் ஏற முனையும் ஆங்கிலமும் ஏற்படப் போகும் பாதிப்புகளும், அரும்புகள், கேணல் கிட்டு நினைவாக என்பன உட்பட பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.


## எமது புதிய வெளியீடு

விஜயகுமார் - ராதிகா நடித்த
பாரதிராஜாவின்
கிழக்கு சீமையிலே

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8413)



யாழ். மிட்ரவுண் றோட்டரக்ட்
கழகம் நடாத்தும்
தமிழர் பண்பாட்டு

## கோலப் போட்டி

மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள சகலரிடமும் கோரப்படுகின்றன

**விண்ணப்ப இறுதித்திகதி தை 25**

போட்டி இரு பிரிவுகளில் நடாத்தப்பட்டு பரிசில்கள் தனித்தனியே வழங்கப்படும்.

1-ம் பரிசு – 1000/- 2-ம் பரிசு - 750/-
3-ம் பரிசு – 500/-

முதல் 20 இடங்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும்.
பரிசில்கள் அன்பளிப்பு:

**கணேசன் பிடவை மாளிகை**

மேலதிக விபரங்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் இடங்கள்:
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்,
மெடி எயிட்ஸ் பார்மசி, நல்லூர்.

- செயல்திட்ட இயக்குனர்

விளம்பர அன்பளிப்பு:

**புதிய சியாமளா நகை மாளிகை**

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(7266)


"ஆனந்தகானம்"
ஊரெழு கிழக்கு.

குடும்பத்தினர்

(7257)

## அந்தியேட்டி அழைப்பு

19-01-1994





**கணபதிப்பிள்ளை கந்தையா** — **கந்தையா அன்னம்மா**

தோற்றம்: 02-09-1912 தோற்றம்: 03-02-1914
மறைவு: 20-12-1993 மறைவு: 17-12-1993

எங்கள் குடும்பத்தின் ஒளிச்சுடராகவும் எமக்கும் மற்றையோர்க்கும் வழிகாட்டியாகவும், எல்லோரின் நன்மதிப்புக்குரியவர்களாகவும் விளங்கிய எங்கள் அன்புத்தெய்வங்களே!

உங்கள் நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னார்களின் ஈமக்கிரிகைகள் இன்று 19-01-1994 புதன்கிழமைசிறுப்பிட்டி கிழக்கு அரசந்திடலில் திருமதி ஞானேஸ்வரிஇராமச்சந்திரன்இல்லத்தில்நடைபெறும். தயவு செய்து இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி. (7222)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நினைவு கூருகின்றோம்...

## 1994-01-19

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு- இருதயபுரம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**லெப். கலா** (ச. ஜெயராஜ் - தாண்டவன்வெளி - மட்டு)

**லெப். அரசன்** (க. சகாயராசா - இருதயபுரம் - மட்டு)

**தாசன்** (டொமினிக் யேசுதாசன் - மட்டக்களப்பு)

**ராஜ்** (நித்தியானந்தன் ராஜ்குமார் - மட்டக்களப்பு)

இதே சுற்றிவளைப்பின் போது வீடுகளுக்குள் பூட்டி எரிக்கப்பட்டும், சுட்டும் கொல்லப்பட்ட 30 தமிழர்கள்.

யாழ் - ஏழாலைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது சுடப்பட்டு காயமுற்றிருந்து இத்தினம் உயிரிழந்த உடுப்பிட்டியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1987ஆம் ஆண்டு சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சின் போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சை பெற்றுவருகையில் வீரச்சாவெய்திய-

**சாள்ஸ்** (மகாதேவன் மணிவண்ணன் - புலோலி கிழக்கு - பருத்தித்துறை - யாழ்)

கிளிநொச்சி - திருநகர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ஜெயசீலன்** (கந்தையா மனோகரன் - சிவநகர், உருத்திரபுரம் - கிளிநொச்சி)

1989ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவு சுண்டிக்குளம் பகுதியில் படகில் வந்த இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்-

1990ஆம் ஆண்டு வசாவிளானில் வீரச்சாவெய்திய-

**ஜெயந்தன்** (நாகமுத்து யோகராசா - புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் - யாழ்)

1991ஆம் ஆண்டு வவுனியா - குருமன்காட்டுப் பகுதியில் சிறிலங்காக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**லெப். லவன்** (தர்மலிங்கம் யோகராசா - விளாத்திக்குளம், ஓமந்தை - வவுனியா)

**லெப். நிக்சன்** (கணேஸ் ஜெயதாஸன் - விளாத்திக்குளம், ஓமந்தை - வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8405)

## சிந்தனைக்கு

எதிர்காலத்தைப் பற்றி நீ சிந்திக்காது விட்டால் உனக்கு எதிர்காலம் என்று ஒன்று இருக்காது.

-- ஜான் கேலிஸ்வொர்தி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


# சொல்லொன்று..

மனித உரிமைகள், மனித நேயம் என்பவை தொடர்பாக மேற்குலக நாடுகளின் சொல்லொன்று செயல் ஒன்றாக உள்ளது. இவை அரசியல் உள்நோக்கமும், லாப நோக்கும் கொண்டவை, இதற்கு பொஸ்னியாவில் இருந்து சிறிலங்கா வரையிலும் பல உதாரணங்கள் பரவிக் கிடக்கின்றன.

இந்த வகையிலேயே சுவிட்சர்லாந்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதையும் குறிப்பிடலாம். ஏனெனில், சுவிட்சர்லாந்தின் இம்முடிவானது, அந்நாடு, மனித உரிமைகள், மனித நேயம் என்பனவற்றிற்கு அப்பால், தமது லாபம் ஒன்றையே நோக்காகக் கொண்டது.

உலகில் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் முன்னணி நாடுகளில் சிறிலங்கா அரசும் ஒன்று. இது குறித்து இன்று எவரும் சந்தேகம் கொள்ள வேண்டிய தேவையே இல்லை. இதற்குச் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களில் இருந்து இலங்கையில் இயங்கும் மனித உரிமை ஸ்தாபனங்கள், மனித நேய அமைப்புக்கள் எனப் பல ஆதாரமாக உள்ளன.

அதற்கும் மேலாக மண்டைதீவுக் கிணறுகளில் இருந்து தோண்டப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் இருந்து, சூரியகந்த மலைப் பகுதியில் தோண்டப்பட்ட | தோண்டப்படவுள்ள மனித எலும்புக்கூடுகள் வரை ஆதாரமாக உள்ளன. இதற்கும் மேலாக, வடக்கு - கிழக்கில் இன்று உள்ள இராணுவ முகாம்கள். கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்பனவற்றைத் தோண்டினால் இன்னும் பெருமளவு ஆதாரங்கள் கிடைக்கும்.

அத்தோடு, இலங்கையில் அரச படையினரால் கொல்லப்பட்டவர்கள் | படுபவர்கள் ஆயுததாரிகளோ, அன்றி தீவிரவாதிகளோ அல்ல. பச்சிளம் பாலகர்களில் இருந்து தள்ளாடும் வயோதிபர்கள் வரை ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றிக்கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு ஆதாரம் இல்லை என யாராவது கூற முற்படுவார்களானால் அவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்றே கொள்ள முடியும். அவர்கள் எந்த உண்மையையும் கண்டுகொள்ளக் கூடியவர்கள் அல்ல.

இந்நிலையில், இலங்கையில் இருந்து வெளியேறியவர்களை அரசியல் ...

## மரங்கள் கடத்திய சிப்பாய்மீது வழக்கு

(கொழும்பு)

சட்டவிரோதமாக காட்டு மரங்களைக் கடத்திய இராணுவ சிப்பாய்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கெக்கிராவைப் பகுதியில் நடைபெற்ற மேற்படி மரக் கடத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வழக்கில் மூன்று இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக கிரிமினல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது

## தீயசக்திகளின் பிடியில் தொண்டா சிக்கியுள்ளார்

- செல்லச்சாமி தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் இ.தொ.கா. சார்பில் அங்கத்துவம் பெற்றிருக்கும் சம்பந்தப்பட்ட எட்டுப் பேரும் இராஜினாமாச் செய்வதன் மூலம் அமைச்சர் செல்லச்சாமி ஒற்றுமை காண்பதற்கான ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்வாராயின் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க தான் தயாராக இருப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தலைவர் தொண்டமான் தீயசக்திகளின் பிடியில் இருந்து விடுபட்டால் சமாதானம் உருவாகிவிடும் என்று திரு. செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் செல்லச்சாமி மேலும் தெரிவிக்கும்போது, என்னையும், தலைவரையும் எப்படியும் பிரித்தே தீருவது என்று கங்கணம் கட்டிச் செயற்படும் ஒரு சிலர் விரிசலை மேலும் விரிவுபடுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். தலைவரைச் சரியான தீர்வுக்கு வரவிடுகிறார்கள் இல்லை என்றார்.

ஓய்வு பெற்றோர்

## ஆங்கில ஆசிரியராவதற்கு மீளவும் விண்ணப்பிக்கவும்

(கொழும்பு)

இளைப்பாறிய அரச ஊழியர்களையும், ஆசிரியர்களையும் ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பது குறித்து அண்மையில் அமைச்சு வெளியிட்ட விளம்பரம் தொடர்பாக கல்வி அமைச்சு புதிய விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்துள்ளது. ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் சுய விபரங்களை ஓர் ஒழுங்குக்கு அமையத் தராததால், விண்ணப்பங்களை கம்பியூட்டரில் போட முடியவில்லை எனக் கல்வி அமைச்சு கல்வி ராஜாங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பும்படி முன்பு விளம்பரத்தில் கோரப்பட்டிருந்து இப்போது இந்தப் புதிய விண்ணப்பப் படிவங்களை நிரப்பி பத்தரமுல்லைக்கு அனுப்பும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெறும் ஆசிரியர் ...

... ரூபா வரை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

வடபகுதிக்குப் பொறுப்பாய் இருந்த

# இராணுவ உயர் அதிகாரிகள் தண்டிக்கப்படும் நிலை வரலாம்

### பூநகரி தாக்குதலின் விசாரணையின் விளைவு

(கொழும்பு)

வடபகுதி இராணுவ புலனாய்வு பணிப்பாளரின் எச்சரிக்கையை அலட்சியம் செய்தமை உட்பட நான்கு முக்கிய குற்றச்சாட்டுக்கள் வடபகுதிக்கான 21ம் காலாட் படைப் பிரிவின் தளபதி பிரிகேடியர் கெமுனு குலதுங்க, வடபிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் ரோஹான் தலுவத்தை, மற்றும் யாழ். பிராந்திய தளபதி பிரிகேடியர் சாலிய நம்முனி, கெமுனு படைப்பிரிவின் பிரிகேடியர் சாந்த கோட்டேகொட, பிரிகேடியர் லயனஸ் பலகல, கேணல் ரஞ்சித் சில்வா, கஜபா படைப் பிரிவின் லெப். கேணல் லலித் தவுலகல ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

பூநகரி இராணுவ முகாம் வீழ்ச்சி தொடர்பாக ஆராய முன்னாள் தளபதி சிசில் வைத்தியரெட்னாவினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது 158 பக்க அறிக்கையில் முகாம் தாக்குதலுக்குப் பின்னர் மேலதிக படையினரை அனுப்புவதில் ஏற்பட்ட காலதாமதம், புலிகள் அணிதிரள்வதை அவதானிக்காமை, பாரிய இடைவெளியில் பாதுகாப்பற்ற காவலரண்கள் அமைக்கப்பட்டமை என்று குற்றச்சாட்டுக்களை வரிசைப்படுத்தியுள்ளது.

பூநகரி தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய பிரிகேடியர்கள் நந்தா சில்வா, சதீஸ் ஜயசுந்தர, சரத் பொன்சேகா, லெப். கேணல் ரத்னசபாபதி ஆகிய நால்வர் குழு தனது அறிக்கையை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது. இவ் அறிக்கையில் மேலும் மேஜர்கள், கப்டன்கள் தரத்திலான ஏழு அதிகாரிகளும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையிலான குழுவொன்று விசாரணை நடத்தக்கூடும் எனவும், வடபகுதி யுத்தத்தில் பங்குபற்றிய பல உயர் அதிகாரிகளும் இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு பதவி இறக்கப்படலாம் எனவும் இராணுவ வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

## கணேசலிங்கம் மேயரல்ல; பிரதம நிர்வாக அதிகாரியே!

(கொழும்பு)

கொழும்பு மேயர் ரத்னசிறி ராஜபக்ஷ மேயர்பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப் பட்டதைத் தொடர்ந்து கொழும்பு மாநகரசபையின் பிரதம நிர்வாக சபையின் பிரதம நிர்வாக அதிகாரியாக துணை மேயர் கணேசலிங்கம் பதவி ஏற்றுள்ளார்.

மேல்மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயகா மேயர் ரத்னசிறி ராஜபக்ஷவுக்கும் கொழும்பு முனிசிபல் சபைக்கும் அனுப்பி வைத்த கடிதத்தில் கூறியுள்ளதாவது: மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் கொழும்பு மேயர் ரத்னசிறி ராஜபக்ஷவை மேயர் பதவியிலிருந்து இடைநிறுத்தஞ் செய்கிறேன். எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் துணை மேயர் திரு. கே. கணேசலிங்கத்தை உடனடியாக கொழும்புக்கு மாநகரசபையின் பிரதம நிர்வாக அதிகாரியாக நியமிக்கிறேன்.

# ஏகாதிபத்திய ஆட்சியில் கூட மனித உரிமை பேணப்பட்டது

## இன்றைய ஆட்சியில் அப்படி இல்லை

- பற்றபொல நந்தா தேரர்

(கொழும்பு)

வடக்கில் நடைபெறும் யுத்தத்தைப்பற்றி எழுதிய பத்திரிகையாளரை ரயர் போட்டு எரிக்கப்போவதாக இராணுவம் அச்சுறுத்தியிருக்கும் போது இந்த நாட்டில் எவ்வாறு மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று கொட்டுவகொட வண. பற்றபொல நந்தாதேரோ கூறினார்.

ஜா-எல கந்தானை மனித ...

... தினை ஒட்டி இக்கூட்டம் நடைபெற்றது.

சிறிலங்காவில் சுமார் 60, 000 பேர் காணாமல் போயுள்ளார்கள் என்று சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது. இவ்வாறான மனித உரிமைகள் மீறல்கள் ஏகாதிபத்திய ஆட்சிக்காலத்தில் கூட இடம்பெறவில்லை. அரசு மனித உரிமையில் அக்கறை கொண்டிருக்குமானால் மனித உரிமைகள் மீறல் ...

... டுள்ளது. இவ்வகையில் 22 பொலிஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வண. நந்தாதேரோ மேலும் கூறினார்.

வண. ஒஸ்வால்ட் பேசுகையில், இப்போது பன்னாட்டு முதலீட்டாளரும் மனித உரிமைகளை மீறி வருகின்றனர். தொழிலாளர் ...

## புலமைப் பரிசில் பரீட்சை தொடரும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்ந்து வருடம் தோறும் நடாத்தப்படும் என கல்வி கலாசார அமைச்சர் வி. ஜே. மு. லொக்கு பண்டார தெரிவித்தார்.

மேற்படி பரீட்சையை அரசு நிறுத்திவிடப் போவதாக கூறப்படுவது பொய் வதந்தியாகும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை 8ஆம் வகுப்பிலும் ஒரு பரீட்சையை நடத்துவது பற்றியும் இப்போது பரிசீலனை செய்யப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வைத்திய பரிசோதனை

யாழ் - இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இயங்கும் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் மகா வித்தியாலயம், இறுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ...

முடியும், அவர்கள் எந்த உண்மையையும் கண்டுகொள்ள எக் கூடியவர்கள் அல்ல.

இந்நிலையில், இலங்கையில் இருந்து வெளியேறிய வர்களை அரசியல் தஞ்சம் கோருவதற்கு அருகதை அற்ற வர்கள் என எவ்வாறு கருத முடியும்? இவர்கள் தாய் மண்ணைவிட்டு வெளியேறியது சரியா? கடந்த காலத்தில் அவர்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடாதவர்கள் என்பவைஒருபுறம் இருப்பினும், சிறிலங்காஅரசின் மிலேச் சத்தனமான தாக்குதலுக்கு அஞ்சி வெளியேறுபவர்க ளுக்கு புகலிடம் மறுக்கப்படுவது எப்படி நியாயமாகும்? சொத்தும், குடும்பமும் அழிக்கப்பட்டால்தான் அரசியல் தஞ்சம் என்பது எத்துணை நியாயமானது? உலகில் இன்று இலங்கைத் தமிழர் என்பதே அகதி அந்தஸ்து பெறப் போதுமானது.

இதேவேளை திருப்பி அனுப்பப்படும் அகதிகளை தென்னிலங்கையில் வைத்துப் பாதுகாப்பதும், பராமரிப் பதென்பதும் வேடிக்கையானதும், சிங்களப் பேரின வாத அரசின் இனஅழிப்பு / ஒடுக்கல் நடவடிக்கைக ளுக்குத் துணைபோவதுமான விடயமும் ஆகும். சிங்கள ஆட்சியாளர்கள் இன்று மேற்கொள்ளும் அரசியல் வன் முறையில் சிங்கள இளைஞர்களே நாட்டை விட்டு ஓடும் நிலையில், தமிழரை சிங்கள அரசிடம் பணயம் வைப்ப தென்பது ஓநாயின் வாயில் ஆட்டைக் கொடுத்ததிற்கு ஒப்பானதாகும்.

மேலும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பில் நாடு திரும்புபவர் களை விடுவதென்பது கடந்த கால சம்பவங்கள் எதை யும் கருத்திற் கொள்ளாத ஒரு நடவடிக்கை ஆகும். இதே போன்றே இந்தியாவும் கூறிக் கொண்டு அகதி களைத் திருப்பி அனுப்பியது. ஆனால், அவர்களில் பலர் இராணுவத்தாலும், தேசவிரோத சக்திகளாலும் கைது செய்யப்பட்டனர். துன்புறுத்தப்பட்டனர். ஆனால் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கியோரால் எதையும் செய்ய முடியவில்லை.

இந்நிலையில், சுவிட்சர்லாந்து அரசாங்கமோ அன்றி மேற்குலகமோ அகதிகளைத் திருப்பி அனுப்ப மேற் கொள்ளும் முடிவானது, அவர்களால் பெரிதாக பிரசா ரம் செய்யப்படும் மனித உரிமை, மனித நேயம் என்ப னவற்றிற்கு முற்றிலும் விரோதமானது. அதேவேளை, சிங்களப் பேரினவாதத்தின் இனவாதப்போக்குக்கு மறை முகமாக ஊக்கமும், ஒத்துழைப்பும் கொடுப்பதும் ஆகும். இதன்பின் மனித உரிமை, மனித நேயம் என் பன பற்றி அவை பேசுவதில் அர்த்தமில்லை- இதே வேளை ஒருவருக்கு தமது தாயகத்தைத் தவிர, வெளி நாட்டு அகதிவாழ்க்கையில் பாதுகாப்பும், சுதந்திரமும் கிட்டாது என்பதற்கு இது நல்லதொரு படிப்பினையும் ஆகும்.

---

ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெறும் ஆசிரியர் களுக்கு மணித்தியால அடிப் படையில் சம்பளம் வழங்கப் படவுள்ளது. கல்வித் தகை மைக்குஏற்ப மணித்தியாலத் திற்கு 150 ரூபா முதல் 250

...நீதிதேரோ கூறி னார்.

ஜா-எல கந்தானை மனித உரிமைகள் குழு மற்றும் கொட்டுவகொட மக்கள் வட்டம் இணைந்து நடத்திய கூட்டத்திலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். சர்வ தேச மனித உரிமைகள் தின

அரசு மனித உரிமையில் அக் கறைகொண்டிருக்குமானால் மனித உரிமைகள் மீறல் குற் றத்துக்காக நீதிமன்றங்களி னால் தண்டிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை வீட் டுக்கு அனுப்பியிருக்க வேண் டும். மாறாக அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்

மனித உரிமைகளை மீறி வருகின்றனர். தொழிலாளர் களின் உரிமைகள் மறுக்கப் பட்டுள்ளன. சர்வதேசப் பள் ளிக்கூடங்களைத் தொடங்கு வதன் மூலம் சாதாரண மக் களின் இலவசக் கல்வி உரி மையே பறிக்கப்படுகிறது என்றார்.

...இறுப்பிட்டிஅமெரிக்கன்மிசன் வித்தியாலயம் ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிக ளுக்கு இன்று யாழ் - லயன்ஸ் கழகத்தினரால் வைத்திய பரிசோதனைமேற்கொள்ளப் படும் என மேற்படி வித்தி யாலயங்களின் குறிப்பொன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(22)

# அமெரிக்காவில் நிலநடுக்கம் 27பேர் பலி; கட்டடங்கள் சேதம்

(வாசிங்டன்)

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்ப ட்டதன் விளைவாக 27பேர் உயிரிழந்துள்ளனர் நேற்று முன்தினம் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் ஏற்பட்ட இந்த நில நடுக்கத்தால் தகவல் தொட ர்பு சாதனங்கள் முடமாக்கப் பட்டதுடன், பல கட்டடங் கள் இடிந்து நாசமாகின. இந்த அநர்த்தத்தை தொட ர்ந்து தெற்கு கலிபோர்னியா பகுதியை பெருநாசப் பகுதி என்று அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் அறிவித்து இருக்கி றார். நகர மேயர் 24 மணி நேர ஊரடங்கையும் பிறப் பித்துள்ளார்.

நிலநடுக்கத்தால் ஒரு அபா ர்ட்மென்ட் புளக் முழுவதும் அப்படியே சரிந்து போனதா கவும், அதற்குள்ளிருந்த 15 பேர் கொலையுண்டதாகவும் கூறப்படுகின்றது. இந்தப் பிர தேசத்தின் பிரமாண்டமான போக்குவரத்து வசதி எக்கச் சக்கமாக சீர்குலைந்து போயி ருப்பதுடன் லொஸ் ஏஞ்சல் ஸின் அநேக கட்டடங்களில் தீப் பிடித்தும் இருக்கிறது தக வல் தொடர்பு வசதிகளும், காஸ் குழாய் பாதைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மின் விநியோகம் சீர்குலைந்து போயிருக்கிறது. இந்த நில அதிர்ச்சி ஏற்பட்ட பல மணி நேரத்தின் பின்பும் அதிர்வு கள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாகக் கூறப்படுகிறது- றிச்டர் 8.6 புள்ளி அளவில் நிலநடுக்கம் பதிவாகி இருப்ப துடன் தெற்கே சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவிலு ள்ள சந்தியாகோவிலும் கிழ க்கே 440 கிலோமீற்றர் தொலைவிலுள்ள லாஸ்வி காஸ் பகுதியிலும் கூட உண ரப்பட்டுள்ளது.

# ஜனவரி 22 முதல் அகதிகள் மீண்டும் அனுப்பப்படுவர்

(சென்னை)

மண்டபம் முகாமில் இருக் கும் மூவாயிரத்து இருநூறு இலங்கைத் தமிழ் அகதிகளும் இம் மாதம் 22ஆம் திகதி முதல் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட இருப் பதாக தமிழக அரசு அதிகா ரிகள் கூறியுள்ளனர்.

இராமநாதபுர மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியா ளர்கள் மத்தியில் பேசும் போது இந்த முகாமில் 6800 அகதிகள் தங்கியிருப்பதா கவும் தெரிவித்தார்.

# அமெரிக்கா - பாகிஸ்தான் கூட்டு இராணுவ பயிற்சி

(டில்லி)

பாகிஸ்தான் - அமெரிக்க இராணுவத்தினர் ஐந்துவார கால கூட்டு யுத்தப் பயிற்சி யில் ஈடுபட்டுள்ளனர். பெஷா வர் வடபகுதி மலைப்புறத் தில் இந்த அதி உயர் யுத்தப் பயிற்சி நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது

பாகிஸ்தான்படையினருக்கு யுத்தப்பயிற்சிவழங்குவதோடு அமெரிக்க துருப்புகளும் இங்கு யுத்தப்பயிற்சி பெறு வர். இப்பயிற்சியை வழங்க 150 அமெரிக்க கமாண்டோ க்கள் இஸ்லாமாபாத் வந்தி றங்கியுள்ளனர்.

கடந்த ஆண்டும் இத்தகைய கூட்டு இராணுவப் பயிற்சி நடைபெற்றது. அமெரிக்கா பாகிஸ்தானுடன் இராணுவ ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்வதால் பயிற்சி இரண் டாவது வருடமாகவும் தொ டர்வதாக தெரிவிக்கப்படுகி றது.

கொழும்புநகர் பகுதிகளில்

# தமிழ்இளைஞர்கள்2000பேர் ஜனவரியில் மட்டும் கைது

(கொழும்பு)

தமிழ்ப் படங்கள் திரையி டப்படும் தியேட்டர்களில் இருந்து படம் முடிந்து வெளி யேறும் தமிழ் இளைஞர்க ளும் யுவதிகளும் கூட கொழும் பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இத்தகைய கைதுகளின் போது கொழும்பில் பரம்ப ரைபரம்பரையாக வாழ்பவர் கள், மற்றும் பல தேர்தல்க ளில் கொழும்பில் வாக்களித் தவர்கள் கூட தவறவிடப்படு வதில்லையாம். இந்த வருடம் ஆரம்பம் முதல் இதுவரை 2000ற்கும் அதிகமான தமிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# காங்கிரஸ் நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டும்

## தோட்டத் தலைவர்கள் வற்புறுத்து

(கொழும்பு)

காங்கிரசில் ஏற்பட்டிருக் கும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் அதிகாரத்தை தேசிய சபை தலைவர் தொண்டமானுக்கு வழங்கி இருக்கிறது. எனவே கால தாமதம் செய்யாமல் சமரச முயற்சிகளை உடனடியாக மேற்கொண்டு பிரச்சினைக ளுக்கு தீர்வு காண வேண்டும். இவ்வாறு அட்டன் பகுதி யைச் சேர்ந்த முப்பது தோட் டங்களின் தோட்டத் தலை வர்கள் முப்பதுபேர் அமைச் சர் செல்லச்சாமியை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந் தித்து கோரிக்கை விடுத்துள் ளனர்

இந்தச் சந்திப்பின்போது காங்கிரஸ் தலைமைத்துவத் தில் ஏற்பட்டிருக்கும் விரிசல் கள், மத்திய மாகாணசபை உறுப்பினர்கள்மீது எடுக்கப் பட்ட ஒழுங்கு நடவடிக்கை, பொதுச் செயலாளர் மீதான நடவடிக்கை மற்றும் நிதிநிலை என்பன தொடர்பாக தோட் டக்கமிட்டித் தலைவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

**அதிக நீர் பாய்ச்சல் அழிவுக்கு வழி காட்டல்**

# அமெரிக்காவில் குடியேற அதிர்ஷ்ட சீட்டின் மூலம் விசா

(கொழும்பு)

வெளிநாட்டவர் அமெரிக்காவில் குடியேறுவதற்கு அதிர்ஷ்டச் சீட்டுக்களை குலுக்கி விசா வழங்க அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான விண்ணப்பங்களை இலங்கைப் பிரசைகளும் அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முறையில் ஒக்டோபர் 1994-இல் விசாக்கள் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது என அமெரிக்க தூதரக வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர். விண்ணப்பதாரர் கடதாசியில் தெளிவாக ஆங்கிலத்தில் முழுப்பெயர், பிறந்த இடமும் திகதியும், தபால்விலாசம் ஆகிய விபரங்களை அறிவிக்க வேண்டும்.

அமெரிக்க அரசு விசா விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கான விலாசம் ஒன்றை அறிவிக்கவுள்ளது. அந்த விலாசத்தைத் தவிர அமெரிக்க தூதரக முகவரிக்கு அல்லது அமெரிக்க அரசுத் திணைக்களங்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் தெரியவருகிறது. ஒருவர் ஒரு விண்ணப்பம் மாத்திரம் சமர்ப்பிக்கலாம், ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பினால் அந்த விண்ணப்பங்கள் ஒருசேர நிராகரிக்கப்படும்.

அதிர்ஷ்ட விசாக்கள் கம்பியூட்டர் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளன. தெரிவாளர்கள் நேர்முகத் தெரிவுக்குச் சமுகமளிக்க வேண்டும். கிறிமினல் குற்றத்துக்காகதண்டிக்கப்பட்டவர்கள் மற்றும் அமெரிக்காவில் சீவனோபாயத்தை கவனிக்க முடியாதவர் நிராகரிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியும், விலாசமும் பின்னர் அறிவிக்கப்படும் என்று தூதரக வட்டாரங்கள் கூறுகின்றன.

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் விண்ணப்பம்கோரப்படுகிறது

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாண சபை பொதுச்சேவைக்கு பட்டதாரி பயிலுநர் உதவி ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகிய ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

விண்ணப்பதாரிகள் 3 வருடங்களாவது வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு பிரதேசத்தில் நிரந்தரமாக வசித்து வருவதை உறுதிப்படுத்த வேண்டும். பெப்ரவரி 15-ம் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். பெப்ரவரி 15-ம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இறுதிப்பரீட்சைக்கு தோற்றிபெறுபேறுகளைஎதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்க முடியும். ஒரு வருடத்திற்குப் பின் பதவி நிரந்தரமாக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

இதுகுறித்த மேலதிக விபரங்களை ஈழநாதம் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## பழைய மாணவர் கூட்டம்

(தென்மராட்சி)

யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர்களுக்கான விசேடபொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்என கல்லூரி அதிபர் த. சந்தையா தெரிவித்துள்ளார். (86)

## செயலக திருத்த வேலைகள் இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான சுப்பசொனிக் போர் விமானம் மேற்கொண்ட தாக்குதலால் சேதமடைந்த யாழ். செயலக கட்டட திருத்த வேலைகள் இன்று ஆரம்பிக்கப்பட உள்ளன.

மேற்படி கட்டடத் திருத்த வேலைக்கான முதலாவது தொகுதி கட்டடப் பொருள்கள் வந்ததை அடுத்தே இத்திருத்த வேலைகள் உடன் ஆரம்பிக்க உள்ளதாகவும், திருத்த வேலைகளை துரிதமாக மேற்கொண்டு இரு மாதங்களுக்குள் அதனை முடிக்க உள்ளதாகவும் தெரிய வருகின்றது (சி,ச)

## மூன்று சு.க. உறுப்பினர்கள் பாராளுமன்றம்செல்லதடை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்கள் பாராளுமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்ற மூன்று நாட்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் தீர்ப்பையும் மீறி இவர்கள் சபை நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்ததால் இவர்கள் வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பரவலாக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்காமையை எதிர்த்தே இம் மூவரும் பாராளு

## காதலித்தபெண்ணை ஏமாற்றமுயன்றவருக்கு விவாகப்பதிவு செய்யுமாறு தமிழீழநீதிமன்றம்உத்தரவு

(தென்மராட்சி)

தான் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்யமறுத்து ஏமாற்ற முனைந்த ஒருவரை சாவகச்சேரி நீதிமன்றம் உடனடியாக அப்பெண்ணை விவாகப் பதிவுசெய்யு ... ரூபா குற்றப் பணமாகவும், ஒரு வருடச் சிறைத்தண்டனையாகவும், பெண்ணுக்கு மான நஷ்டமாக ஒரு லட்சம் ரூபா வழங்கவேண்டியும்வரும் என சாவகச்சேரி நீதிமன்றம் அந்நபரை எச்சரித்தது.

## பவுண் நகை கண்டெடுப்பு

பவுண்நகை ஒன்று நிதித்துறையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன்உரிமையாளர் யாழ்ப்பாணம், பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் தகுந்த ஆதாரம் காண்பித்து மீட்டுச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## இன்று கொடுப்பனவு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தமிழ்மொழி, சமூகக்கல்வி, ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்குகளில் பங்கு கொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று பி. ப. 2 00 மணிக்கு கோட்டப்பணிமனையில் வழங்கப்படுமென்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தங்களுக்குரிய கொடுப்பனவுகளை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதனிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் கோட்டப் பிரதிக கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

---

### சிறிலங்கா

இவ் வருட ஆரம்பத்திலும் இப்பணி மீண்டும்ஆரம்பிக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### மூன்று

இராணுவத் தலைமை அதிகாரியாக மாற்றப்பட்டதை அடுத்து அந்த வெற்றிடத்துக்கு அவர் மாற்றம் பெற்றுள்ளார்.

பிரிகேடியர் வஜிரா விஜேரட்னா பாணகொட முதலாவது படைப்பிரிவுக்கு தளபதியாக மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார் இதேவேளை பிரிகேடியர் நந்தா சில்வாவுக்குமேஜர் ஜெனரல்பதவி வழங்கப்பட்டு, இராணுவத் தொண்டர் படைப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியில் உள்ள இரண்டாவது படைப்பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் றோஹன் தலுவத்த தொடர்ந்தும் கடமையாற்றுவார். கேணல் களான சூள செனிவரட்னாவும், சரத்முனசிங்காவும் பிரிகேடியர் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்

# இலங்கையில் அடுத்த பத்தாண்டில் முதியவர் தொகை அதிகரிக்கும்

(கொழும்பு)

இளைஞர்களை விட அடுத்த பத்தாண்டுகளில் முதியவர்களின் எண்ணிக்கையே அதிகரிக்கும் என்று சனத்தொகை சம்பந்தமான புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இளைஞர்களை விடவும் முதியவர்களை அதிகமாகக்கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறும் என்று ஐக்கிய நாடுகள்சபையின் அறிக்கைஒன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1980-ம் ஆண்டில் மொத்த சனத்தொகையில்முதியவரின் எண்ணிக்கை 43 சதவீதமாக இருந்தது இன்னும் முப்பது ஆண்டுகளில் இது 11 7 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த முப்பது ஆண்டுகளில் இரண்டு குடும்பங்களுக்கு இடையில் 65 வயதைக் கடந்த ஒருவர் இருப்பார் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## கணித பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

1993 ஆம் ஆண்டு முன்னோடிப்பரீட்சையில் ஏனைய பாடங்களில் சித்தியடைந்து கணிதபாடம் சித்தியடையாத மாணவர்களுக்கான விசேட செயலமர்வு இம் மாதம் 28 ஆம்திகதி மாலை 3மணிக்கு ஆரம்பமாகவுள்ளது பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ் மாவட்ட கணித-விஞ்ஞான மூளவள நிலையம் கோப்பாய் ம. வி இல் அல்லது வடமராட்சிக் கோட்ட கணித வளநிலையம் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு விஞ்ஞானப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ. வேதநாயகத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## அதிபர்கள் கூட்டம்

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆண்டு 11 வகுப்புக்களையுடைய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டமொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 3 00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்று பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தெரிவிதத்துள்ளார்.

கல்விப் பணிப்பாளர் திரு.

## இளங்கலைஞர் மன்றத்தில் வாரஇறுதியில்கம்பன்விழா

காரைநகர் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் கம்பன் விழா எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வெள்ளியன்று மாலை நான்கு மணியளவில் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ். தலைமையில் ஆரம்பமாகும் இவ் விழாவில் அன்று மங்கள இசை பட்டிமண்டபம் என்பன இடம் பெறும். சனிக்கிழமை காலை கம்பன் இசை அமுதும் கலை தெரிஅரங்கமும் மாலை இலக்கியச் சோலை, படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள் என்பன இடம்பெறும். மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை கம்பன் இசை அமுது, சுழலும் சொற்போர் என்பனவும் மாலை கவியரங்கம், வழக்காடு மன்றம் என்பனவும் இடம்பெறும்.

## பயிலுநர் ஆசிரியரை நிரந்தரமாக்க பரீட்சை

நான்கு வருட காலமாகப் பயிலுநர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களின் சேவையை நிரந்தரமாக்கும் நோக்குடன் பரீட்சைஒன்றை நடாத்த கல்வி அமைச்சு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

தற்போது இலங்கை முழுவதுமாக 43 ஆயிரம் பயிலுநர்ஆசிரியர்கள்கடமையாற்றி வருகின்றனர். பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரீட்சையில் சித்திபெற தவறும் பயிலுநர் ஆசிரியர்கள் மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய நிலை ஏற்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

---

### கிளைத் தேர்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்டக் கிளைத்தலைமையகம் சகல 14 உதவி அரச அதிபர் பிரிவுகள் தோறும், பளைப் பிரிவிலும் எதிர் வரும் மார்ச் மாதம் பிரிவுக் கிளைத் தேர்தல்களை நடாத்தவுள்ளது.

வருடாந்தப் பொதுக் கூட்டம், தேர்தல் விபரங்கள் சுற்று நிருபங்கள் மூலம் அறிவிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. (24)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னப்பிள்ளைகந்தப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்ததிருமதி சின்னப்பிள்ளை கந்தப்பிள்ளை 1994-01-18ஆம் திகதியன்று காலமானார். இவர் திரு. வ. கந்தப்பிள்ளையின் அன்புமனைவியும் இராசம்மா (கனடா), பரமேஸ்வரி (ஆசிரியை, யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலை), கமலாதேவி, காலஞ்சென்ற சாந்தி. வசந்தாதேவி, ஸ்ரீகாந்தன் (ஜேர்மனி), ஜெயந்தி (கனடா). குகதாஸன் (கனடா), றஜி. ரவீந்திரநாதன் (கனடா), சுதா (ஆசிரியை, யா/ஊரெழு கணேச வித்தியாசாலை), முகுந்தன் (யா/ஊரெழு கணேச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னத்துரை (நில அளவையாளர், கனடா), செல்லத்துரை (ஓய்வு பெற்ற வருமானவரி உத்தியோகத்தர்). குமாரவேலு (கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் வலி-தெற்கு), கந்தசாமி (கனடா), இராணி

ணை விவாகப் பதிவுசெய்யுமாறு உத்தரவிட்டது.

குடமியன் வரணிப் பகுதியைச் சேர்ந்த இந்நபருக்கு எதிராக பாதிக்கப்பட்ட அப்பெண் சாவச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தார். கடந்த திங்களன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கின் போது தமிழீழச் சட்டக் கோவைப்படி அப்பெண்ணை திருமணம்செய்யுமாறும் செய்யத்தவறின் முப்பதாயிரம்

அந்நபரை எச்சரித்தது.

இதற்கு அந்நபர் தான் மூன்று வருடம் வெளிநாடு சென்று திரும்பிவந்து அப்பெண்ணைத் திருமணம்செய்வதாகக் கூறினார். எனினும் நீதிமன்றம், இவர் உடனடியாக இப்பெண்ணை விவாகப் பதிவுசெய்யுமாறும் விவாகப் பதிவுச்சான்றிதழை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் தீர்ப்பளித்தது. (86)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 18-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 269

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-5863, 27-7537, 24-5416, 24-8558, 26-1583
24-4726, 26-2277, 26-4579, 24-9938, 27-6493
41-8823.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9038, 41-9652, 24-4153, 27-9492, 27-8160
24-6439, 26-1741, 27-1292, 42-0728, 24-8391
24-7078, 26-0495, 26-7540, 41-8155, 41-1531
28-4255.

## தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம்

மாணவர் அவையால் முன்னர் மண்ணெண்ணெய் வழங்கியவர்களுக்கு 2 லீற்றர் வீதம் 22-01-94 முதல் 25-01-94 வரை தினமும் காலை 10 மணிமுதல் 1 மணிவரை மாணவர் அவை அலுவலகத்தில் வழங்கப்படும்

மாணவர் அவை
(7265) தொழில் நுட்பக் கல்லூரி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

திதே இம் மூவரும் பாராளுமன்றத்தில் குழப்பம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இனப்பிரச்சினை

மைக்கைப்பற்ற 48 மணிநேரம் பிடித்தது என அவர் மேலும் விளக்கிக் கூறினார்.

இராணுவம் சில ஆலோசனைகளைப் பெற்று புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றார் அவர்.

## தடைசெய்யப்பட்ட

யப்பட்ட வலயத்தினுள் நபர் அல்லது படகோ வள்ளமோ சென்றால் அதை தடுத்துவைக்கும் அதிகாரமும் துப்பாக்கி சூடு நடத்துவதற்கும் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுளளது-

## தரமற்ற

அதிகரித்து காணப்படும் இன்றைய சூழ் நிலையில் பொது மக்களின் நல்வாழ்விற்கு பாதகமான இத்தகைய செயற்பாடுகளை இல்லாதொழிக்க உணவு தயாரிப்பு, மற்றும் விநியோகத்தில் ஈடுபடும்சகல தரப்பினரும் பொது சுகாதார விதிகளை இறுக்கமாக கடைப்பிடித்து பொறுப்பான முறையில் நடந்து கொள்ளுமாறும் தகுதிவாய்ந்த அதிகாரிகளை உரிய முறையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழீழ விடுதலைப்புலிகளின்சுகாதாரப்பகுதியினர் கேட்டுக் கொள்கின்றார்கள்.

## ஷெல்

பகுதியில் வீழ்ந்துவெடித்தன. இச்சம்பவத்தின் போது ஒரு சிறுவன் காயமடைந்தான்.

மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த யோகராசா வசீகரன் (வயது 09) என்னும் சிறுவனே காயமடைந்தவராவார். (21)

உயர்த்தப்பட்டுள்ளனர்

## 15 நிமிடத்தில்

பிடுகின்றது.

நள்ளிரவு தாக்குதலின் போது அநேகமான படையினர் இலக்கு நோக்கி தமது துப்பாக்கிகளை இயக்காது அச்சம் காரணமாக பரவலாக சூடு நடத்தினர். இதனால் ரவைகள் முடிவடைய வேண்டிய நிலை ஏற்பட்டது ரவைகளுக்கு பற்றாக்குறை இருந்த போதிலும் அதைசீர் செய்யும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபடவில்லை அந்நேரத்தில் யாழ்ப்பாண இராணுவ தலைமையகத்தில் 200,000 சுற்றுக்கும் மேற்பட்ட ரவைகள் இருந்தன. தாக்கப்பட்ட பூநகரிக்கு அனுப்பப்பட்ட மேலதிக படையில் ஒவ்வொருவருக்கும் 120 சுற்று ரவைகளே வழங்கப்பட்டிருந்தன எனக் குறிப்பிடும் விசாரணைக் குழுவின் அறிக்கை ஆயுதக்கையிருப்பு குறித்து யாழ் மாவட்ட தளபதி பிரிகேடியர் நமுனி எதுவும் தெரியாதவராக இருந்தார் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

மேஜர்ஜெனரல்துளுவத்த பூநகரி முகாமிற்கென கட்டளை அதிகாரி எவரையும் நியமிக்கவில்லை. இதனால் தாக்குதலுக்குள்ளான படையினருக்கு தமது தலைவர் யார் என்பது தெரியவில்லை. அத்துடன் டெரியளவில் ஊடுருவலை தடுக்கும் வகையில் முன்னணி காவலரண்கள் இருக்கவில்லை எனவும் இதனால் துப்பாக்கி சூடு எல்லை முழுமையாக பூர்த்தியானதாக இருக்கவில்லை எனவும் அவ்வறிக்கை கூறுகிறது தேவையற்ற வேளையில் அங்கு டாங்கிகள் போன்ற கனரக வாகனங்களும் ஆயுதங்களும் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டதையும் அது குற்றஞ்சாட்டியுள்ளது.

(மேலும் ஒரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

விததுள்ளார்.

கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்று வாரென்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

சங்கானைக் கோட்ட பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் வடக்கு வலய கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

அதிபர்கள் சங்க அலுவல தெரிவும் இக் கூட்டததில் விசேடமாக இடம் பெறும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அநுராவின் கூட்டத்தில் மோதல்

(கொழும்பு)

பத்தேகமவில் நடைபெற்ற அநுராபண்டாரநாயக்காவின் பொதுக் கூட்டத்தில் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அநுராவைப் பயன்படுத்திப் பிரசாரம் மேற்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சி ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றிலேயே மோதல்கள் இடம் பெற்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.நா அதிகாரியின்

கப்பல் போக்குவரத்து சீரின்மை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாகதெரிய வருகிறது எனினும் எதிர்வரும் 23ஆம் திகதிக்குப் பின்னர் இவ் விஜயம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிய வருகிறது. (க)

லர் வலி-தெற்கு), கந்தசாமி (கனடா), இராணி (ஜேர்மனி), இராசேந்திரம் (கனடா), கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகமுத்து, பொன்னையா, சின்னத்தங்கைச்சி (கனடா), காலஞ்சென்ற செல்லத்துரை, தம்பிப்பிள்ளை, செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இலட்சுமி, பாக்கியம், இராணிமலர், ஸ்ரீகௌரி, பாலசுப்பிரமணியம் (அதிபர், உரும்பராய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும், அருட்குமரன் (கனடா), ஆனந்தக்குமரன் (கனடா), செந்தில்குமரன் (கனடா), செல்வக்குமரன் (கனடா), செந்தூர்குமரன் (கனடா), அருட்செல்வி (கனடா), அம்பிகைக்குமரன் (கனடா), புருஷோத்தமன், பஞ்ச கல்யாணி, காயத்திரி, துஷ்யந்தி, லோகப்பிரசன்னா, இராகுலன், காண்டீபன், சாரங்கன் (ஜேர்மனி), சாதனா (ஜேர்மனி), துஷ்யந்தி (கனடா), துர்க்கா (கனடா), வைகுந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார், அன்னாரின் பூதவுடல் (1994-1-18) செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் விலங்கன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:

திரு. வ. கந்தப்பிள்ளை
(கணவர்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (7263)

## கிளமெண்ட் வஸ்தியாம்பிள்ளை

பலாலியைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டவரான கிளமெண்ட் வஸ்தியாம்பிள்ளை (நேற்று)18-01-94 அன்று உடுப்பிட்டியில் அவரதுஇல்லத்தில்காலமானார். இவர் மயிலிட்டிமுன்னாள் கிராமசபை உறுப்பினருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நிகழ்ந்து வல்வை மயானத்தில் தகனம்செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

தற்போதைய முகவரி:
சேச்லேன்
ஆதியாமலை,
உடுப்பிட்டி. (சி-8414)